# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889)
ஆவணி மாதம் 28-ந் உ ஆரம்பமானது.

செவ்வாய் வெள்ளி தோறும் வெளி வருவது

Registered as a News Paper in Ceylon
P M G No. H A 59/300 of 1939

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத் - ௬௩] யாழ்ப்பாணம்:- நந்தன ஹ சித்திரை மீ ௧௦ உ செவ்வாய்க்கிழமை (22 April 1952) [இல - ௫]


# நித்தியன் என்று நினை!

## வாழ்விலே தெய்விகம் - மிளிர வேண்டும்

ஆக்கை நாமல்ல. நாமோ ஆன்மா. ஆன்மாவுக்கு ஆதியுமில்லை அந்தமுமில்லை. அது நித்தியமானது. எனவே நாமும் நித்தியமானோம். அது எப்பவோ முடிந்த காரியம்.

இந்த உடல் உயிர் அநித்தியம். இன்ப துன்பங்கள் அநித்தியம். உலக வாழ்வே அநித்தியம். எனவே அநித்தியமான தெல்லாம் நமக்குப் புறத்தே யுளது. அவற்றின் சிந்தனையில் காலத்தை அவமே போக்காமல் நித்தியமானதிலேயே எமது சிந்தனையை நிறுத்தி நமது சுயநிலையாகிய அமரத்துவத்தை நாம் உணர்வோமாக. நாம் எதைச் சிந்தனை செய்கிறோமோ அதே தன்மையுடையவையாகிறோம், நமது சிந்தனைகளை உலக விவகாரங்களில், சதா செலுத்திக்கொண்டிருப்போமானால், அவ்விவகாரங்களின் தன்மையுடையவரே யாவோம் என்பதற்கையமில்லை

ஆன்மா சேதனமாயது. ஆகையால் நாமும் அறிவுடைப் பொருளாவோம். அறிவுடைப் பொருளாகிய நாம் ஏன் வீண் விவகாரங்களில் தலையிட்டு நம்மை வருத்திக் கொள்ள வேண்டும்? சற்றே நிதானத்துடன் இருந்து ஆறுதலாகச் சிந்திப்போமானால், நாம் ஒன்று ஆன்மாவொன்று என்ற விதமாக எமது சீவியத்தை நாம் நடத்திக்கொண்டு போவதினாலேயே எல்லாவித இடையூறுகளும், ஆறுதலின்மையும், அச்சமும் சந்தேகமும் நம்மைச் சதா பீடிக்கின்றன என்பதின் உண்மை புலப்படும். நாம் ஆன்மா அல்லவெனின், எமக்குள் இருந்து சாட்சியாய் விளங்கும் புருஷத்துவம் எது என்பதை முதலில் ஆராய்ச்சி செய்து நாம் ஒரு முடிவுக்கு வரவேண்டும். நாம் ஆர் என்பதையும் எமது சுயதன்மை எது என்பதையும் நிதானமாகத் தீர்மானிக்காமல் சிந்தனைக் கெட்டாத காரியங்களை விளங்கிக்கொள்ளலாமென்று மனப்பால் குடிப்பதால் பயன் ஒன்றுமில்லை.

### ஆக்கை ஆன்மாவல்ல!

ஆக்கைக்காவது, மனமுதலிய அதன் கருவி காரணங்களுக்காவது, ஆன்மாவின் வியாபகத்துவமோ சேதனத்துவமோ இல்லை என்பதை நாம் எம் அநுபவத்திற் காண்கிறோம். ஆக்கைக்குக் காலவரையறையுண்டு. ஆகையால் அது அநித்தியமானது. நிலைபெற்ற நித்தியானந்தத்தைத் தேடும் யாம் அநித்தியமான இந்த உடம்பு எமக்கு நிலைபெற்ற சுகத்தைக் கொடுக்கும் என்று நினைப்பது கனவினிற் கனவேயாகும். இந்த உடல் ஒரு கருவி. கருமம் புரிவதற்கு வேண்டியது. கர்மம் முடிந்தவுடன் அதன் தேவையும் முடிந்துவிடும். இதை நாம் ஒரு காலமும் மறக்கக் கூடாது. மனிதனுக்குச் சீவிய பரியந்தம் கர்மமுண்டு, கருமத்தைச் சரிவர ஆற்றுவதற்குத் தேகம் நல்ல நிலையில் இருக்கவேண்டும். ஆகையால் அதைப் பேணவேண்டியது அவசியம். ஆனால், நாம் அதை எப்படிப் பேணினாலும் அதற்கும் பிணியும், மூப்பும் மரணமும் வந்தே தீரும். அந்தப் பெரிய உண்மை எம் மனத்தில் எப்பொழுதும் நினைவாயிருத்தல் வேண்டும்.

சிவதொண்டன்

எமது வாழ்வுத் திட்டங்களெல்லாம் நித்தியத்தைப் பற்றி நிற்கும் வகையிலே அமைந்திருக்க வேண்டும். ஆனால் நாம் செய்வதெல்லாம் அதற்கு நேர்மாறு. நாம் ஒரு பிறவியை எடுக்கிறோம். வாழ்வுக்கு வேண்டியதென உலகம் தேடும் பொருள் பண்டத்தை நாமும் தேடுகிறோம். ஓடி மறைவதற்கிடையில் இறப்பு, இன்னொரு பிறப்பு. மேலும் வாழ்வுக்குச் சம்பாத்தியம். ஈற்றில் என்ன விருத்தியடைந்துகொண்டு போகிறதென்றால் பந்தமும் பிராரப்தமும் மட்டுமே என்று காண்கிறோம். நிலைத்ததெது? இவைதாம். மீட்சி எங்கே? ஒருபோதுமில்லை. வாழ்வாவது மாயம் மண்ணாவது திண்ணம் என்று பாடிக்கொண்டு பிறவிகள் தோறும் திரியவேண்டியது தான்.

ஆகையால், நாம் எந்தஉலக விவகாரத்தில் ஈடுபடினும் நித்தியனுமென்ற நினைவு நம்முள் அகலாது என்றுமிருக்கவேண்டும். ஆன்மாவுக்குப் பந்தம் என்பதில்லை. பந்தமெல்லாம் இத்தேகத்துக்கே. ஆக்கை தனக்கு வரும் [illegible] க்க வழியில்லா [illegible] கின்றது. எண்ணிய எண்ணமெல்லாம் வீணாகின்றது. எல்லாம் ஏமாற்றம். இன்பம் துன்பத்திலே முடிகிறது. துன்பம் என்று நினைத்தது இன்பம் ஆகிறது. உலகம் என்னும் கூட்டில் அடைக்கப்பட்டிருக்கும் இத்தேகம் காலத்துக்குச் சிறை, இடத்துக்குச் சிறை, காரணத்துவத்துக்குச் சிறை. தேகத்துக்குமீட்சிகிடையாது. எப்போது உலகில் மானிடர் தோன்றினார்களோ அப்போது பந்தமும் தோன்றிவிட்டது. உலகம் உண்டெனில் பந்தமும் உண்டுதான். தேகத்துக்கு முடிவு அழிவு ஒன்றுதான்.

(தொடர்ச்சி 3-ம் பக்கம்)

திருத்தொண்டர் திருநாள்

# சிவானந்த ஞானவடிவான நாவுக்கரசர்

## உழவாரப் படைகொண்டு பணிசெய்த உத்தமர்

### தீந்தமிழ் மாலைகளாற் சிவார்ச்சனை செய்த அடியார்

திருமுனைப்பாடி நாட்டிலே திருவாமூரிலே வேளாளர்குலத்திலே குறுக்கையர் குடியிலுதித்த புகழனார் என்பவருக்கும் அவர் மனைவியார் மாதினியாருக்கும் திலகவதியார் என்னும் புத்திரியும் மருணீக்கியார் என்னும் புத்திரனும் பிறந்தார்கள். திலகவதியார் பன்னிரண்டாட்டைப் பராயத்தாரானபொழுது அந்த ஊர் அரசனது சேனாதிபதியாயிருந்த கலிப்பகையார் என்பவருக்கு அவரை மணஞ் செய்வதற்குத் தந்தையார் இசைந்திருந்தார்.

விவாகம் செய்வதற்கு முன்னரே தனது அரசனுடைய பகைவரை எதிர்த்துப் போர் செய்யக் கலிப்பகையார் சேனைகளோடு செல்ல நேர்ந்தது. அங்கு போர் செய்யுங் காலத்திலே புகழனார் இவ்வுலக வாழ்வை நீத்தார். மனைவியாரும் உடன் நீத்தார். கலிப்பகையாரும் யுத்தத்தி லிறந்தார். தனக்குக் கலிப்பகையாரை விவாகம் செய்ய நிச்சயித்திருந்ததை அறிந்ததிலகவதியார் தாமும் உயிர்துறக்க எத்தனித்தார். மருணீக்கியார் திலகவதியாருடைய பாதங்களில் வீழ்ந்து வணங்கி அவ்வாறு உயிர் துறப்பதேயானால், தாமே முன்னர் உயிர் துறப்பதாகக் கூறித் தமக்காக உயிர் வாழுமாறு வேண்டினார். தம்பியார் உயிர் வாழ்தலை விரும்பிய அம்மையார் தமது எண்ணத்தை நீக்கித் தவவாழ்வை மேற்கொண்டார்.

### சமண சமய ஆசாரியராதல்

யாக்கை நிலையாமை முதலியனவற்றை நினைந்து மருணீக்கியாரும் இல்வாழ்க்கையுட் புகாது அறஞ் செய்தலையே தமக்கு உறதொழிலாகக்கொண்டார். எனினும், அவர்பா

தொடர்ச்சி 4-ம் பக்கம்

## மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்

திருச்சிற்றம்பலம்

மண்ணில்நல் லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில்நல் லகதிக்கு யாதுமோர் குறைவிலைக்
கண்ணில்நல் லஃதுறுங் கழுமல வளநகர்ப்
பெண்ணில்நல் லாளொடும் பெருந்தகை இருந்ததே.

திருச்சிற்றம்பலம்

அரசியல் அலை

# ஆபாசப் பேச்சாளர்கள் தேசத் தொண்டர்களா?

## பயனில்சொல் பாராட்டும் பதடிகள்

## மனிதப் பண்பாடு மறைகின்றதா?

பொய், குறளை, கடுஞ்சொல், பயனில்சொல் என்றவை மனிதப் பண்பாட்டுக்காகாதன என்று எத்தேசத்துக் கலாசாரமும் காட்டி நிற்பவும், பழம் பண்பாடும் கவின்கொள் கலாசாரமும் உடைத்தாகிய தமிழ் மரபு, அரசியல் வாதிகளின் ஆபாசமான, அபாண்டமான பயனில் சொற்களால், பலாத்காரப்படுத்தப்படுவது கவலைக்கிடமாகின்றது.

சென்னை மந்திரிசபைத் தலைவர் சிறந்த தமிழ்ப் பிரமுகர் திரு. ச. இராசகோபாலாச்சாரியார் தாம் முதன் மந்திரிப் பதவியை ஏற்றகாலை விடுத்த புத்திமதியை ஈண்டு நோக்குவது நன்று.

"மறுபக்கத்தை ஆராயாது கேட்பதெல்லாவற்றையும நம்பாதீர்கள். ஒவ்வொரு தனி மனிதனும் நேர்மை யென்ற சட்டத்தை அநுசரிக்கும் நீதிபதியாக இருத்தல் வேண்டும். ஒருவரை ஒருவர் இகழுதல் வேண்டாம். வசை மொழி [illegible] வசை மொழிவோர் நன்நிலையைக் காட்டவும் மாட்டாது."

தேர்தற் கூட்டங்கள் ஆர்வமாக நடக்கின்றன. ஆக்க வேலை சிறிதும் இல்லை. எதிரியை இழிவாகப் பேசுவதே தேர்தற் பிரசாரமாகின்றது. வாய்கூசாது நெஞ்சம் நடுங்காது பயனில் சொற்களை மனம்போனவாறு வாக்காளர் மத்தியில் விதைக்கின்றார்கள்.

"பயனில்சொல்பாராட்டுவானை மகனெனல்
மக்கட் பதடி யெனல்"

இந்த மக்கட் பதடிகள் கிராமங்கள் தோறும் ஊர்கள் தோறும் கட்டவிழ்க்கப்பட்டுத் திரிகின்ற நிலைமை தமிழ் மரபுக்கும் தமிழ்ப் பண்புக்கும் பேராபத்தை விளைவிக்கப் போகின்றதே. சமயங்களையும் சமயானுட்டானங்களையும் தூற்றித் திரியும் இந்தப் பயனில சொல்லாளரையும அவர்களது சகாக்களையும அவர்களுக்கு மறைமுகமாகத் துணைசெய்பவர்களையும் சமயத் துரோகிகள் என்றும், தமிழ்த்துரோகிகள் என்றும் எண்ணித் தூரத்தில் நிறுத்துவதே நெறி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரனாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.


# இந்துசாதனம்

யாழ். நந்தன ஞு சித்திரை மீ ௩௦ உ செவ்வாய்க்கிழமை


## அரசியற் கொள்கைகளின் அந்தரங்கம்

பாராளுமன்றத் தேர்தலில் அபேட்சகர்களாக நிற்கின்றவருட் பெரும்பான்மையோர் ஏதோ ஒரு கட்சிப் பற்றுடையவராகவே காணப்படுகின்றனர். சனநாயக முறைக்குக் கட்சிக் கட்டுப்பாடு இன்றியமையாத தென்பது இப்போதைய அரசியல் விளக்கம். ஆகவே கட்சிகள் பல உள என்று நாம் கவலை கொள்ள வேண்டியதில்லை. எனினும் அகில உலக அரசியல் நோக்கங்களை எடுத்தாராயும் இடத்துக் கட்சிகள் தம்முள்ளே தாம் ஒன்றற்கொன்று வேறுபாடுடையதாக விரும்பினும், பெரும் பிரிவாக இரண்டு கொள்கைகளின்பாற் படுகின்றன. அவைதாம் 'இறைவன் உண்டு அவன் அன்றி ஒன்றில்லை' என்ற உண்மை ஞான உணர்ச்சி உள்ளவர் ஒரு சாரார்; 'இறைவன் இல்லை; உண்டெனினும் அதை நம்புவதற்கிடமில்லை. எனினும் மனிதன் அன்றி ஒன்றில்லை' என்ற அஞ்ஞானிகள் மறுசாரார்,

இவ்விதமாக அரசியற் கொள்கைகள் சமயங்களின் அடிப்படையான ஒரு உண்மைக்கு உடம்படுவதும் அதை மறுப்பதுமாகப் பிரியக்கூடுமேயானல் இந்த வேறுபாடு மனித வர்க்கத்திற்கே பேராபத்தை விளைவிக்கக்கூடும் என்பதை நாம் எடுத்துக்காட்ட வேண்டியதில்லை. மேலைத் தேசத்தார்கள் கிழக்கு நாடுகளை அடிமைப்படுத்தி அவற்றின் தொன்மைசால் பழக்க வழக்கங்களையும் மத மொழி விருத்தியையும் கெடுததுவிட்டார்கள் என்று பாரதநாடு வழிகாட்ட இலங்கை முதலிய பல நாடுகள் வீரமுழக்கஞ் செய்து விடுதலையடைந்தன. அடிமைத் தளை அகன்றுவிட்ட தென்று ஆறுதல் அடையமுன்னர் மேலைத் தேசக் கொள்கை ஒன்று, அதுவும் ஆத்மவிருத்திக்கே அபாயகரமான தொன்று, திரும்பவும் மதக் கட்டுப்பாடு மிக ஓங்கிய ஆசிய தேசங்களில் நுழைந்து எழுந்து விட்டதென்றால் நாம் கண்மூடிக் கொண்டு வாளா இருப்பதா?

## வாழ்க்கை வானில்

வளர்மதி

### கொடிக்கொடுமை

பனைக்கொடி யாழ்க்கொடி மகரக்கொடி என்றெல்லாம் பழந்தமிழ நாட்டிற் பறந்தன. மேன்மையாகவே அசைந்தன. வெகுட்சியையோ பொருமையையோ எழுப்பாது ஒய்யாரமாக உலாவின. ஆனல் இப்போதைய தமிழ் நாட்டில் நாளுக்கொருகொடி நாழிகைக்கொரு வர்ணம்.

சென்ற தேர்தலில் மூவர்ணமும் ஒரு சிவப்புக்கரையும் சேர்ந்த கொடி தமிழர் மகாநாட்டுக்கும், பச்சைக்கொடி ஐக்கியதேசியக்கட்சிக்கும், சிவப்புக்கொடி புரட்சிக் கூட்டத்தவர்களுக்கும் பறந்தன.

இன்றைய தேர்தலில் உலக்கை தேய்ந்து உளிப்பிடியானற்போல, தமிழர் மகாநாட்டுக் கொடி ஒரு சாராருக்கு அவ்விதமாயும், சிவப்புக்கரை ஒழிந்த ஏனைய வர்ணங்களுள்ள கொடி தமிழரசுக்கட்சிக்கும் மற்றைய கொடிகள் இருந்தபடியும் காற்றில் அசைகின்றன.

அடுத்த தேர்தலில், மூவர்ணத்தில் ஒரு வர்ணம் இல்லாது இன்னமொரு கொடி உயரும்போலும். இன்னமொரு கட்சியும் ஆரம்பிக்கும்போலும்.

x x x

### கொடியுங் குடியும்

முன்னை நாளிற் கொடிக்கும் குணநலனுக்கும் தொடர்பிருந்து வந்தது. இப்போது கொடியும் குடியும் கூடித் தாண்டவமிடுகின்றன. காரியமறிந்த கண்ணியமான ஒழுக்கமுள்ளவர்கள் தேர்தற்கொடியை ஏற்றுவதைக் காணவில்லை. பனைக்கொடியையும் ஏற்றித் தேர்தற் கொடியையும் ஏற்றுவதைப் பார்த்தால் குடியா கொடியா எது அசைவது என்ற வித்தியாசம் தெரியவேமாட்டாது.

x x x

### கட்டுவதும் வெட்டுவதும்

ஏவற்பேய் கூரையைத் தாவினதுபோலக் கொடிகட்டிய அதே பேர்வழி கள்ளிரவில் அதைவெட்டி விடுகின்றார், ஏன் மற்றைநாள் அவருக்குக் கட்டுந்தொழில் வேண்டுமே! ஆனல் வேலையில்லாத் திண்டாட்டம் இரண்டு மாதத்திற்கிராது. துணி, நூல், கயிறு, தையல் வேலையாளர், கொடிகட்டுவோர் கொடியிறக்குவோர் இவைக்கெல்லாம் ஊக்கமது கொடுக்கும் அந்தப்பொருள். இவையெல்லாம ஒருங்கு சேர்ந்து உல்லாசமான வாழ்க்கை நடத்துவது போதாதா?

x x x

### தமிழ்நாட்டுக்கு நல்ல அறிகுறி

வரம்புயர ...... என்று அன்று அப்பெருமாட்டி சொல்லித் தமிழ் நாட்டு வளனுக் காதாரமாயுள்ளவற்றை யுணர்த்திவைத்தா.

வசைபெருக...... என்று இப்போதைய கவிஞன் சொல்லித் தமிழ்நாட்டின் பண்பாடு குறைவதற்கு வழி இது என உணர்த்துகின்றான்.

தமிழ்த்தாயே! உன் திருநாமத்தைச் சொல்லியா இந்தத் திருக்கூத்து.

ஆசிய நாடுகளின் கலாசாரத்துக்கெல்லாம் அடிப்படையானது ஒழுக்கம்; பதி, பசு என்றும், தந்தை தாய் மக்கள் என்றும், குருசீடர் என்றும் இன்ன பிற முறைகளிலே கட்டுப்பட்டு நின்று உண்மை யுணர்ந்து நல்லன ஓம்பித் தீயன விலக்கும் தனிப் பெரும் முறை பரதநாட்டுக்கும் ஈழநாட்டிற்கும் மூலாதார நெறியென்பதை யார் மறுப்பர். எனவே இப்போதைய அரசியற் கொள்கைகளை ஆராய்ந்து பார்க்குமிடத்துப் புரட்சி என்று போர்க்குறை கூவும் அபேத வாதமோ, பொதுவுடைமையோ சம சமூகமோ இவையெல்லாம் எங்கள் நாட்டுக் கலாசாரத்தையும் மதப் பற்றையும் வேரோடு களைந்துவிட முனைந்து நிற்கின்றன என்பது வெளிப்படையாகின்றது.

இந்த நிலையில் நாம் கூறவேண்டிய புத்திமதி ஒன்று. இறை நெறிக்கு மறுப்பாகிய இந்த இதர தேசக் கொள்கைகளை நேரடியாகவோ மறைமுகமாகவோ ஆதாரமாகக் கொண்ட அரசியற் கட்சிகளையும் அவற்றை ஆதரிக்கும் 'புறங் குன்றி கண்டனையரேனும், அகம்குன்றி மூக்கில் கரியார் உடைத்து' என்றாங்கு மறைந்தொழுகும் கட்சிகளையும் நாம் எதிர்க்காது விட்டால் ஈழநாடும் மிலேச்சர் நாடாகி விடும் என்று எச்சரிக்கை செய்கின்றோம்!

# நந்தனவருஷபலன்

நந்தன வருஷ பலனையிட்டுக கோண்டாவில பிரபல சோதிடர் பிரமஸ்ரீ எஸ். சதாசிவக்குருக்கள் அவர்களாற் கணித்து எழுதப்பட்ட புதுவருஷ பலன்:—

கர ஞு பங்குனி மீ 30 உ சனி இரவு ஐந்துமணி பதினறில் ஆங்கிலீஷ் 1952 ஏப்பிறில் பதின்மூன்று திகதியாகும், அமர பட்சம் திருதியை விசாகம் நாலாம் பாதம சித்தி நாமயோகம் பிட்டிக்கரணம் மீனலக்கினத்தல் நந்தன வருஷம் ஜெனனமானது. ஜெனன காலதெசை வியாழ மகாதெசை.

உதயத்தில் சுக்கிரன் புதனும் இரண்டில் சூரியன் வியாழனும் ஆறில் கேதுவும் ஏழில் சனியும் எட்டில் சந்திரன் செவ்வாயும் பன்னிரண்டில் ராகுவும் நிற்கிறது.

இப் புது வருஷத்திலுள்ள பன்னிரண்டு மாசங்களிலும் கிரகங்கள் நின்ற ஒவ்வொரு ராசிப்படியும் கோட்சாரப்படியும் நட்பாட்சி உச்ச பகை நீச கிரகங்கள் வக்கிரித்த பலனையிட்டும் சகல சமுதாய பலன் மாதபலன் யோகபலன் முதலாயனவற்றை கணித சித்தாந்தப்படி கணித்துள்ள பலன்கள்.

முதலாவது:- இவ்வருஷத்தில் ஏராளமான மழையும், புயல் காற்றும் வெள்ளப்பெருக்கமும் தேசங்களதோறும் அதிகமாயிடையிடையே உண்டு. புயல் காற்றால் யானை குதிரை முதலாய மிருகங்கள் அழிதலுண்டாம்.

இரண்டாவதாக:- தேசமன்னருள் சண்டைக் குளப்பங்களுக்கேற்ற முயற்சிகள் அன்னியதேசத்து வேற்றரசர்களுக்குண்டு.

மூன்றாவதாக:- சிறதா உத்தியோகங்களிலமர்ந்தவர்களும் பெரும்பதவி அடையக்கூடிய நிலைமையை யுடையவராவார்கள் - அனேகமான உத்தியோகங்களில் இருப்போர்க்குச் சம்பள ஏற்றங்களும் கீர்த்தி மேம்பாடுகளுமுண்டாம்.

நாலாவதாக:- அரசாட்சியில் தேசமன்னர்க்குள் குளப்பங்களும், வாக்குவாதங்களும் மந்திரிசபைக் கலகமும் இடை இடையே வந்தேதீரும்.

ஐந்தாவதாக:- சுக்கிரன் சூரியன் வியாழன் முதலிய கிரகங்களின் பலன் எல்லாச் சாதிகளிலும் பணப்பெருக்கமும் வரவும் மேலாக உண்டாம். வியாபாரிகளுக்கு அதிக லாபமுண்டாம். புகையிலை முதலாய கறுப்பு நிறமுள்ள வஸ்துக்கள் மிகவும் விலையேற்றமாய் முற்கூறுவந்து, மார்கழி தையில விலை குறைவாயுண்டு - உலோகவகை மின்னா வகைகள், வைடூரியம், கோமேதகம், புஷ்பராகம் முதலாய ரத்தின வகைகள் விலை ஏறும் - தங்கம் விலை குறையும். பெரிய மில் வைத்திருப்பவர்கள், பெரிய தோட்டவகையிலிருந்து தூர தேசங்களுக்குக் கறுப்பு, செந்நிற முதலிய சாமான்களில் வியாபாரஞ் செய்வோர்க்கு வெகு நன்மையும் பெரு நயமுமுண்டு. ராகுவின்படி குதிரை வைத்திருப்பவர்கட்கு பெருலாபமும், றேஸ் குதிரைகளால நன்மைகளுமுண்டாம. அவ்வப் பரீட்சை உடைய ராஜமன்னர்களே குதிரைகளால் திரவியப் பேறடைவார்கள. ஏழைகள பெருங் நஷ்டமும் கஷ்டமும் அடைவார்கள்.

ஆறாவதாக:- செவ்வாயால் பூமி வகையில், பெரும பெரும் பிரயோசனங்களாலும், ஏராளமான தோட்டமுடையோர்களிடங்களில் பெரும் அரசாங்க வித்தியாலயங்கள், ஆஸ்பத்திரிகள், சீமெந்து தொழிற்சாலைகள ,அனுதைப் பிரசைகட்குக் கட்டிடங்களும் பல வேறு வகைப்படும இடங்களில் அமைக்கப்படும், சட்டசபைத் தேர்தலில் பெரும் பணச்செலவும், பெருங்குளப்பங்களும் உயிர்ச்சேதங்கட்கிடமான கலகங்களுமுண்டாம். அநேக நீராவி ஓடும என்ஜின்கள், கப்பல்கள் கடலில் மூழ்தலுமுண்டாம.

## வட இலங்கை மது விலக்கு மகாசபை

### பிரசாரக் கூட்டங்கள்

#### சாவகச்சேரியில்

நிகழும் நந்தனவருடம் சித்திரை மீ உ உ (14-4-52) திங்கட்கிழமை மாலை 7 மணியளவில் சாவகச்சேரி இந்துக்கல்லூரி மண்டபத்தில் திரு. S. K. செல்லையா அவர்கள் தலைமையில் ஓர் பிரசாரக் கூட்டம நடந்தது.

அத்தருணம் Dr. C. குருசாமி அவர்கள் திருவாளர்கள க நவரத்தினம், த. வே. தியாகராசா, பண்டிதர் திரு. S. K. தம்பையா ஆகியோர் மது விலக்க வேண்டிய இன்றியமையாமையை விரித்து விளக்கினார்கள்.

இதன்பின் சாவகச்சேரியில் ஒரு கிளைச்சபை அமைக்கும் பொருட்டு திருவாளர்கள் S. K. செல்லையா, V. விநாயகமூர்த்தி, N. மனோகரன், ச. கைலாசபிள்ளை, K. தில்லைநாதன், R. T. சுப்பிரமணியம், சி. அப்பாக்குட்டி, S. சுப்பையா, பண்டிதர் S. K. தம்பையா, S சின்னையாப்பத்தர், M. சின்னத்தம்பி, K. வேலுப்பிள்ளை, S. பாலசுப்பிரமணியம் ஆகியோர் ஒரு நிருவாக சபையாக ஏகமனதாய் நியமிக்கப் பெற்றனர்.

#### கைதடியில்

நிகழும் சித்திரை மீ 4 உ புதன்கிழமை (16-4-52) மாலை 8 மணியளவில் கைதடி முத்துக்குமாரசாமி வித்தியாசாலையில் ஒரு மதுவிலக்குப் பிரசாரக்கூட்டம் திரு. N. இளையதம்பி அவர்கள் தலைமையில் நடந்தது.

Dr. C. குருசாமி, வித்துவான் க. கி. நடராசன் B. O. L., திருவாளர்கள் R. N. சிவப்பிரகாசம், S. அம்பிகைபாகன் ஆகியோர் மது விலக்குத் தொண்டின் இன்றியமையாமையை எடுத்துக் காட்டினர். ஒரு கிளைச்சபை அமைக்குமாறு ஒரு நிருவாக சபையும் அமைக்கப்பெற்றது.

#### கைதடி வடக்கில்

17 - 4 - 52ல் கைதடி வடக்கில் திரு. N. இராமலிங்கம் அவர்கள் தலைமையில் ஒரு பிரசாரக் கூட்டம் நடந்தது. மது விலக்கைப்பற்றி திருவாளர்கள் S. அம்பிகைபாகன, K. அம்பலவாணர் ஆகியோரோடு வடிவேலுச்சுவாமி அவர்களும் பேசினர்கள்.

#### சுன்னுகத்தில்

சுன்னுகம் கதிரமலைச் சிவன் கோயில் வீதியில் திரு. T. குமாரசாமி J. P. அவர்கள் தலைமையில் 20-4-52ல் ஓர்கூட்டம் நடந்தது. திருவாளர்கள். க. நவரத்தினம, S. அம்பிகைபாகன், K. அம்பலவாணர், N. C. வல்லிபுரம ஆகியோரோடு பண்டிதர் திரு. K. நமசிவாயமவர்களும் பேசினர்.

#### நாரந்தனையில்

நாரந்தனையில் 17-4-52 ல் திரு. S. M. நிட்ஜீவ அவர்கள தலைமையில் ஒரு கூட்டம் நடந்தது. Dr. C. குருசாமி, திரு. க. நவரத்தினம், வித்துவான் க. கி. நடராசன் ஆகியோர் பேசினர்.

### ஊரதீவு ஜனசமூகநிலையம்

வருடப்பிறப்புத் தினத்தன்று ஷெ. விழா போரசிரியர் திரு. சி. சதாசிவம்பிள்ளையின் தலைமையில் . நடைபெற்றது. பண்டிதர் ஸ்ரீ. கந்தசாமி வாசிகசாலையின பிரயோசனத்தைப் பற்றியும தலைவர் சமூகத் தொண்டு பற்றியும் பேசினர்கள. மாணவர்களது பாட்டும் "நாட்டியக் குதிரை" என்ற இசை நடனச சித்திரமும் யாவர மனதையும் கவர்ந்தன. இவற்றின பின புது வருட உத்தியோகத்தர் தெரிவு செய்யப்பட்டனர்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## பாலர் ஞானோதய சங்கம் 29-ம் ஆண்டு விழா

கட்டுவன், மயிலிட்டி தெற்கு வர்த்தலைவிளான் பாலர்ஞானோதயசங்க 29 வது ஆண்டுவிழா சென்ற 14, 15-4-52 திங்கள் செவ்வாய் ஆகிய இரு தினங்களிலும் மயிலிட்டி தெற்குப் பாலர் ஞானோதய சங்க வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

14-4-52 மாலை 6 மணியளவில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அதிபர் திரு. T. T. ஜெயரத்தினம் B. A. அவர்களின் தலைமையில் தேவாரபாராயணத்துடனாரம்பமாயது.

சங்க உபதலைவர் திரு. சி. கந்தவனம் அவர்கள் வரவேற்புக்கூறினர். காலஞ் சென்ற இலங்கைப்பிரதமர் கனம் D.S. செனநாயகா அவர்கள்மீது அனுதாபத் தீர்மானமொன்று ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

கடந்த வருடத்தில் சங்கம் புரிந்த சேவைகளைப்பற்றிய அறிக்கையொன்றுகாரியதரிசி திரு. க பொன்னம்பலம் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டது.

சுளிபுரம் அரசினர் மத்திய கல்லூரி விரிவுரையாளர் பண்டிதர் க. சி. நடராஜன் அவர்கள் "தெய்வம்மணக்கும் செய்யுள்" என்பதுபற்றியும் வீமன்காமம் ஆங்கில வித்தியாசாலைத் தலைமைஆசிரியர் திரு. இ. நமசிவாயம் பண்டிதர் அவர்கள் "இலக்கிய இன்பம்" என்பதுபற்றியும்சிறந்த சொற்பொழிவாற்றினர்.

வலிவடக்குக் காரியாதிகாரி திரு. T. பாலச்சந்திரன் அவர்கள் "கிராமாபிவிருத்திவேலைகள்" பற்றியும சங்கவளர்ச்சி பற்றியும் குறிப்புரை கூறினர்.

சீனன்கலட்டி ஞானோதய வித்தியாசாலை மாணவிகளால் சிறந்த சங்கீதக்கச்சேரி நடாத்தப்பட்டது.

தலைவரவர்களின் முடிவுரையோடும் திரு. த. சிவக்கொழுந்தர் அவர்களின் வந்தனோபசாரத்தோடும்கூட்டம் 10மணியளவில் இனிது நிறைவெய்தியது.

15-4-52 பிற்பகல் 2 மணியளவில பண்டிதர் இ. நமசிவாயம அவர்களின் தலைமையில் சங்க உறுப்பினர்கூட்டம நடைபெற்றது. சங்கத்தின் புதிய உத்தியோகஸ்தர் தெரிவுசெய்யப்பட்டனர்.

## அடைவு நகை விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை கிழக்கு, பொ. கா. தாமோதரம் பிள்ளை கடையில் அடைவு வைக்கப்பட்டு இப்போ தவணை தப்பி எடுபடாமல் இருக்கும கீழ விபரிக்கப்படும் நகைகளை 10-5-22 சனிக்கிழமை காலை 10 மணி தொடக்கம் என்னல் பிரசித்த ஏலத்தில் விறகப்படும்.

| நம்பர் | உ | மூ | ஸ்ரு | கொடுத்த ரூபா | ஊர் பெயர் நகை விபரம் | |
|---|---|---|---|---|---|---|
| 3517 | 8 | 1 | 51 | 26 | ஆவரங்கால் செல்லத்துரை கணபதிப் பிள்ளை இமி. கல. புறோச் | 1 |
| 3716 | 25 | 1 | 51 | 300 | சோனகதெரு அ. மு. சு. அப்துல்காதர் இமி. வெ. கல பெண்டன் கோர்த்த சங்கிலி அட்டியல் | 1 |
| 3740 | 27 | 1 | 51 | 25 | திருநெல்வேலி சே. தா. சிதம்பரப் பிள்ளை, தாலி | 1 |
| 3743 | 28 | 1 | 51 | 45 | சுன்னாகம் வேலுப்பிள்ளை சுப்பிரமணியம், குண்டு வைத்த அரைப்பவுண் | 1 |
| 3782 | 1 | 2 | 51 | 200 | பிச்சைக்குளம் ரோடு 23வ்ர். மு.முகம்மது முகையதீன. பூ வேலை செய்த அரை டலர் | 1 |
| 3803 | 3 | 2 | 51 | 70 | கோண்டாவில் கிழக்கு செல்லப்பா செலவரெத்தினம், சி. கில். மோதிரம் | 1 |
| 3904 | 13 | 2 | 51 | 320 | பெரியகடைத் தெரு A M S அப்துல் காதர், சவடி முகப்பு | 1 |
| 3938 | 17 | 2 | 51 | 30 | ஈச்சமட்டை செல்லையா குமாரசாமி இமி. சி. வெ. கல தோடு சோடி | 1 |
| 4057 | 3 | 3 | 51 | 35 | இணுவில கைலாயபிள்ளை அம்பலவாணர் குண்டு வைத்த அரைப்பவுண் | 1 |
| 4069 | 5 | 3 | 51 | 125 | வண்கிழக்கு சரவணமுத்துதுரைராசா சங்கிலி | 1 |
| 4234 | 29 | 3 | 51 | 235 | கன்னாதிட்டி பொன்னையா கந்தையா ரேடியோக் காப்பு சோடி | 1 |

வண்ணார்பண்ணை,
22-4-52

சி. பசுபதிச் செட்டியார்
லெக்தீஸ் மேஸ்தர்.

L.K.S. LEBBAY BROS
GOLD HOUSE

நல்லவாட்சிகள் கிடைக்குமிடம்
எல். கே. எஸ்.
லெப்பை பிரதஸ்
தங்கமாளிகை
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

இலங்கையின்
மிகப்பெரிய
நகை
வியாபாரிகள்
= O =
தந்தி: "JEWELLERS"
போன்: 161.
ஸ்தானம்:
63, கன்னாதிட்டி
யாழ்ப்பாணம்.

## நித்தியன் என்று நினை

1-ம் பக்கத்தொடர்ச்சி

### ஆன்மாவோ நித்தியமானது!

ஆன்மாவுக்குக் காலச்சிறை இல்லை. ஆன்மா வியாபகமானது. அதற்கு இடச்சிறை இல்லை. சேதனமாயுள்ள ஆன்மாவுக்கு காரணத்துவச் சிறை எங்ஙனம்? ஆன்மா தெய்விகம்: தேகம் லௌகீகம்; ஆன்மா நித்தியம், தேகம் அநித்தியம்; எனும் முறையில் எமது சீவியத்தைச் சீர்ப்படுத்திக் கொள்வது அவசியம். புண்ணிய வழியிலே புலன்களைப் போக்க வேண்டும். தருமத்தைக் கடைப்பிடிக்கவேண்டும். திரிகரண சுத்திவேண்டும். மனச் சுத்தி, வாக்குச் சுத்தி, காயச் சுத்தி மூன்றும் இருந்தாற்றான் தெய்வீக வாழ்வு சித்திக்கும். நற்சிந்தனைகள் அல்லாது வேறு சிந்தனைகள் மனத்தில் உதிக்க இடங் கொடுக்கக் கூடாது. ஒவ்வொரு நிமிஷமும் விழிப்பாக இருந்து மனத்தைத் தூயவழியிற் செலுத்தப் பழகிக்கொள்ள வேண்டும். மனத்தையே முழுதாய் மறக்கச் செய்வதற்கு அதை முற்றாய் விழுங்கக்கூடிய பரம்பொருள் உள்ளங் குடிகொள்ள வேண்டும். பரம்பொருள் வணக்கந் தலைப்பட்டால் ஆன்மஞானம் தானே உண்டாகும்.

### அன்பின் சத்தியை உபயோகிக்க வேண்டும்

உலகத்தில் நன்மை தீமை இரண்டும் உண்டு. தீமையை எதிர்க்கிறதை விட்டுத் தீமையையும் நன்மை பயக்கக்கூடியதாய் ஆக்கிக்கொள்ள வேண்டும். அன்பு ஒன்றுமே தீமையை வெல்லக்கூடியது. தீமையைத் தீமையால் வெல்ல முடியாது. ஆன்மாவுக்குப் போல அன்புக்கும் வியாபகத்துவம் உண்டு. அன்பே சிவம். அன்பைத் தியானஞ் செய்வதால் அதன் மாபெருஞ் சக்தி உலகெலாஞ் செறிந்து சகல தீமைகளையும பரிசுத்தப் படுத் திப் போடும்.

### தெய்வீகம் மிளிரவேண்டும்

அகத்தில் அன்பு இருந்தால் வாகிலும் அன்பு கனியும். வாயாலுமென்ன, எழுத்து மூலமாயுமென்ன புறத்தே நாம் பரப்பும் மொழிகளில் அன்பு ததும்ப வேண்டும். அகிம்சை பரம தர்மம். காயத்தால் மாத்திரமல்ல, அதற்கு மேலாக வாக்காலும், இன்னும் மேலாக மனத்தாலும் அகிம்சை செய்வதை முற்றாக விலக்க வேண்டும். வாழ்வில் எச்செய்கையிலும் தெய்வீகம் மிளிர வேண்டும். நித்தியனுமென்பதை நமது வாழ்விலே காணவேண்டும்.

"சிந்தனைக்கெட்டாத
தெய்வத்தை நாயிதமும்
வந்தனை செய்து
வணங்குவோம்- பந்தமுண்டு
முத்தியுண் டென்று
மூனைத்து இல்லாமலே
[illegible]

## 70-வது வருடக் கொண்டாட்டம்

இந்தியாவில் 32 வருட காலம் தமிழ்ப்பணியாற்றி இப்பொழுது இங்கு வந்திருக்கும் உடுவில் தமிழ்ப் பண்டிதர் பிரம்மஸ்ரீ. வ மு. இரத்தினேசுவரஐயர் அவர்களின் எழுபதாவது வயசின் தொடக்கம் 28-4-52-ல் வருவதால் அன்று தினம் பி. ப. 4 மணிக்கு ஒரு உபசாரணைக் கூட்டம் உடுவில் கந்தசுவாமி கோவில் மண்டபத்தில் நடத்த நிச்சயித்துள்ளோம். அன்பர்களின் ஆசியை எதிர்பார்க்கின்றோம்.

இ. நடராஜன்
காரியதரிசி
ஷை உபசாரணைச் சபை

உடுவில்
8—4—52.
M. 7 11, 22—4—52.

## பம்பாயில் மதுவிலக்கு

பம்பாய் மதுவிலக்கு நிருவாக சபையாரின் இளைப்பாறும் மண்டபத்திறப்புவிழாவில் பம்பாய் உள்நாட்டு மந்திரி திரு. மொரார்ஜி தேசாய் பேசும்பொழுது பம்பாய் மாகாணத்தின் மக்கள் மதுவிலக்கைவெற்றிகரமாக்கியதால் இன்று மிகவும் இன்புற்றுவாழுகிறார்கள் இது இன்னும்பலமாகாணங்களில் இவ்வாறு அனுஷ்டிக்கப்படுமென்று நம்புகிறேன் என்று உற்சாகமானஉறுதிமொழிகூறினார்

சென்னைமாகாணத்திலும் மதுவிலக்கு வெற்றிகரமாய் நடந்து ஆண்டுள்ள மக்களுக்கு எல்லையில்லா இன்பத்துக்கேதுவாயிருக்கின்றது என்பது வாசகர்கள் அறிவர்.

## கண்டி மத்திய மாகாணச் சைவ மகாசபை

கண்டி பேராதனை மறியற் கூடத்தில உள்ள இந்து மதக் கைதிகளுக்கு ஞாயிறு வாரந்தோறும் சமய சம்பந்தமான உபதேசங்களும், கூட்டுப்பிரார்த்தனை, பூஜை முதலியனவும் மேற்படி சபையினரால் தயாரிக்கப்பட்ட திட்டத்திற்கமைய சபையினரால் நடத்தப்பட்டு வருகிறது.

இந்து புதுவருடப் பிறப்பன்று (13-4-52) சபையின் காரிய நிருவாக சபையின் பொறுப்பில் மறியற்சாலையில உள்ள இந்து ஆலயத்தில் விசேட பூசை நடத்தப்பட்டுப் பிரசாதம் வழங்கப்பட்டது. அன்று சைவமத ஆசாரங்கள் பற்றியும் அஹிம்சையின் உயர்வு பற்றியும் எடுத்துச் சொல்லப்பட்டது. இவ்வருடத்தில் இருந்து ஒவ்வொருவரும் தம் மனத்தில் இந்துமத கோட்பாடுகளைப் பதித்து, வாழ்வோடு இணைத்து நடைமுறையி லவற்றைக் கையாள வேண்டும் எனத் தூண்டப்பட்டனர்.

## தேவை

நெசவுத்தொழில் ஆசிரியர் வியாவில் சைவ வித்தியாசாலையில் நெசவுத் தொழில் கற்பிப்பதற்குத் தேவை.

இ. நாகலிங்கம்
மனேஜர்

காரைநகர்,
5—4—52.
M. 3 8, 11 22—4—52.

திருமண விஞ்ஞாபனம்

யாழ்ப்பாணக் கல்லூரி ஆசிரியர்,
திரு. தா. பொன்னம்பலம்
அவர்களுக்கும்,
அளவெட்டி தெற்கு,
திரு. மு. வல்லிபுரம் அவர்களின் கனிஷ்ட புத்திரி,
புஷ்பவதிக்கும்

நிகழும் சித்திரை மீ கசு-ந் உ (26-4-52) சனிக்கிழமை இரவு $10\frac{1}{2}$ மணிவரை வரும் சுபவேளையில் திருமணம் நிகழும். அடுத்த நாள (ஞாயிற்றுக்கிழமை) பிற்பகல் 5 மணிக்கு மணமகனில்லத்தில் வரவேற்பு நிகழும்.

சுற்றமித்திரர் வரவை வேண்டுகிறோம்.

"இராச விலாசம்"
கலட்டி, யாழ்ப்பாணம்

இங்ஙனம்
மணமகன் சகோதரர்கள்

M. 12—22 4

திறமான
தேக்க மரங்கள்
பல தினிசுகளிலும்

திறமான
ரூணிமார்க் ஓடுகள்
$13\frac{3}{4}$, 14 இஞ்சிகளிலும்

வந்திருக்கின்றன

தேவைப்படுவோர் உடனே ஆடர்செய்யவும்

சேகரம் & சன்ஸ்
ஆஸ்பத்திரிரோட், யாழ்ப்பாணம்.
Std. 2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவானந்த ஞானவடிவான நாவுக்கரசர்

( முதற் பக்கத் தொடர்ச்சி )

ஹுள்ள ஓர் தீவ்ணைக்குறி வதுவாகப் பண்டு தவ ஒழுக்கத்திற் சிறிது வழுவுற்று அருள் கனி சுரக்கும் சைவ சமயத்தின் சிறப்பை அவர் உணருமாறின்றிப் பாடலிபுரத்துக்குச் சென்று சமண சமய வாழ்க்கையை மேற்கொண்டார். சமணசமய நூல்களை கற்று மாபண்டிதராகித் தரும சேனன் என்னும் பெயருடன் சமண சமய ஆசாரியர்களுள் தலைவரானார்.

## ஆட்கொள்ளப்படுதல்

திலகவதியார் சிவபிரான் மீது மிகுந்த பத்தியுடையராய்த் திருவதிகை வீரட்டானேசுவரர் திருக்கோயிலையடைந்து திருவலகிடுதல் முதலிய திருத்தொண்டுகள் செய்யத்தொடங்கினர், அங்காட்களிலே தம்பியாரை நினைந்து வருந்தி அவரைக் காப்பாற்றுமாறு விண்ணப்பஞ் செய்தார். சிவபிரான் சொப்பனத்திலே தோன்றி மருணீக்கியாரைச் சூலை நோயால் வருத்தி ஆட்கொள்வதாகத் திருவாய்மலர்ந்தார்.

தருமசேனருக்குச் சூலை நோயுண்டாய்விட்டது. சமணர்கள் தாமறிந்த எல்லா வழிகளாலும் அதை நீக்க முயன்றும் சித்திபெய்தவில்லை. வருத்தம் அதிகரிக்கின்றது. தாங்க முடியவில்லை. சகோதரியை நினைந்து அவரிடம் ஆள் அனுப்புகின்றார். அம்மையார் சமணர்களுடைய பள்ளிக்குச் செல்ல மறுக்கின்றார். மருணீக்கியார் மனம் நொந்து திருவதிகையை யடைந்து திலகவதியார் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினர். திலகவதியார் ஐந்தெழுத்தோதித் திருநீற்றைக் கொடுக்க அதை அன்புடன் வாங்கி யணிந்தார். அம்மையார் வழக்கம்போல் திருத்தொண்டு செய்யத் திருப்பள்ளியெழுச்சியிலே திருக்கோயிலுக்குச் செல்ல அவருடன் சென்ற மருணீக்கியார் முறைப்படி வலஞ் செய்து வீரட்டானேசுவரரைச் சந்நிதியில் நின்று வணங்கி அன்பு மீதூரத் திருவருளூந்தி அருளுணர்வு பெற்று "கூற்றாயின வாறு விலக்ககிலீர்" என்னுந் திருப்பதிகத்தை வழுபிறவிகளிலும் வருந்துன்பம் போமாறு பாடியருளினர். உடனே சூலை நோய்நீங்கிற்று. பலவாறுகப் பரமனைப் பாவினர். இனிய செந்தமிழ்ச் சொலவளம பொருந்திய பாடல்களைப் பாடியதனாலே வீரட்டானேசுவரர் திருவருளினால் "திருநாவுக்கரசு" என்னுந் திருப்பெயரை ஓர் அசரீரி வாக்கு அவருக்குச் சூடியது. நாயனர் எளிகூர்ந்து திரிகரணங்களாலுந் திருத்தொண்டுசெய்ய விரும்பித் தியானம் நீங்கா மனமும நாவில் திருவாசகமுமுடையராய் உழவாரத்தொண்டை மேற்கொண்டார்.

## அரசன் தண்டனைகள் பேரின்பம் விளைத்தல்

இவற்றையறிந்த சமணர்கள் அரசனுக்குப் பல பொய்மொழிகளை கூறி நாயனரைத் தண்டிக்கும்படி ஏவினர்கள். அரசனும் மயக்கவுணர்வினனாய்க் கோபங்கொண்டு நாயனரைக் கொண்டுவரும்படி மந்திரிமாருக்குக் கட்டளையிட்டான். மந்திரிமார் நாயனரிடம் சென்று உற்றதைச் சொல்லி வரும்படி கேட்டார்கள். நாயனர் "நாமார்க்குங்குடியல்லோம்" என்றெடுத்து நான்மறை முதல்வர்மீது திருத்தாண்டகம் பாடி நீவிர் சொல்லும் முறையில் வரும் பான்மையனாய் நான் இப்போ இருக்கவில்லை யென்றார். மந்திரிமார் வரும்படி வணங்கி வேண்டினர்கள். வாக்கின் மன்னரும் இசைந்து சென்றார்.

உறுதி தெரியறியாத சமணர் மொழிப்படியே அடிகளை நீற்றறையிலிடுவித்தான் பல்லவன். ஆனடியாரைத் துன்பம் தொடருதலுமுண்டுகொல் என நினைந்து "மாசில் வீணையு மாலை மதியமும்" என்றடியெடுத்துப் பாடித் திருவடி நீழலில் இன்புற்றிருந்தனர் நாயனர். நாட்கள் ஏழு கழிந்தபின் நீற்றறையைச் சமணர்கள் திறந்து பார்க்க நாயனர் இன்புற்றிருந்தார். அதுகண்ட சமணர்கள் நஞ்சு கலந்த பாற்சோற்றைக் கொடுக்க அது அமுதமாயிற்று. அவரைக் கொல்லும்படி அரசனுடைய யானையை ஏவ,

"சுண்ணவெண் சந்தனச்சாந்துஞ்
சுடர்த்திங்கட் சூளா மணியும்
வண்ண வுரிவை யுடையும்
வளரும் பவள நிறமும்
அண்ண லரண்முரணேறு
மகலம் வளாய வரவுந்
திண்ணன் கெடிலப் புனலு
முடையா ரொருவர் தமர்நாம்
அஞ்சுவதி யாதொன்று மில்லை;
யஞ்ச வருவதுமில்லை' என்று

தொடங்கும் திருப்பதிகத்தை நாயனர் பாடுதலும் யானை நாயனரை வலஞ்செய்து வணங்கிச் சென்றது. பாகர்கள் அவரைக் கொல்லுங் குறிப்புக்காட்டித்திருப்ப அது அவர்களையே கொன்று மேலும் பல சமணர்களைக் கொன்றது. அதன்பின் சமணர்கள் நாயனரை ஒரு கல்லுடன் கட்டிக்கடலிலிட்டனர். "சொற்றுணை வேதியன் சோதி வானவன்" என்றெடுத்து நாயனர் நமச்சிவாயத் திருப்பதிகம் பாடினர். கல்லுத் தெப்பமாய் மிதந்தது. கட்டிய கயிறு அறுந்தது. கல்லுத் தெப்பம் திருப்பாதிருப்புலியூர்க் கரையை யடைந்தது. அடியார்கள் அரகரவென்னும் ஓசையுடன் எதிர்கொள்ள அவர்களுடன் சான் கோயிலை யடைந்து, "ஈன்றாளுமாய் எனக்கெந்தையுமாய்" என்னுந் திருப்பதிகம பாடிச் சில நாள் ஆங்கு தங்கியருளினர்.

## திருவடித்தீக்கை பெறுதல்

பின்பு திருவதிகை வீரட்டானேசுரரைத் தரிசிக்கப் பேராசைகொண்டு புறப்பட்டு வழியிற் பல தலங்களை வணங்கிச்செல்லும்பொழுது, திருவதிகை வாசிகள் ஊரை அலங்கரித்து மங்கல வாத்தியங்களுடன் எதிர்கொண்டனர். நாயனர் அவர்களுடன் கோயிலுக்குச் சென்று சுவாமியை வணங்கிப் பதிகங்கள் பாடிவசிக்கும் நாளிலே பல்லவராசன் பழவினை யொழிந்து திருவதிகையை யடைந்து நாயனரை வணங்கிச் சைவ நெறியைச் சார்ந்தான். நாயனர் சிவபெருமான் எழுந்தருளியிருக்குந் திருத்தலங்களைத்தரிசிக்கவிரும்பித் திருவெண்ணெய் நல்லூர், திருவாமாத்தூர், திருக்கோவலூர் முதலிய தலங்களை வணங்கிப் பின் திருப்பெண்ணடகத்திலே திருத்தூங்கானைமாடத்தி லெழுந்தருளியிருக்கும் பெருமானை வேண்டித் தம் திருத்தோள்களில் சூலக்குறியையும் இடபக் குறியையும் பொறிக்கப்பெற்றார். பின்னர் பல தலங்களைத் தரிசித்துச் சீர்காழியிலே திருஞானசம்பந்த மூர்த்தி நாயனரைத் தரிசித்து வணங்கினர். திருஞானசம்பந்தமூர்த்திநாயனரும "அப்பரே" என்று அஞ்சலி செய்தார். அங்கே சிலநாள் தங்கிப் பின்னர் பல தலங்கள் சென்று பாடித் திருநல்லூரிலே திருவடித்தீக்கை செய்யப்பெற்றார்.

## இறந்த பிள்ளையை எழுப்புதல்

பின்னரும் பல தலங்களை வணங்கித் திங்களூர் வழியாய்ச் செல்லும் பொழுது அப்பூதி அடிகளுடைய அன்பின் பெருக்கை அறிந்து அவர் பாலடைந்தார். அடிகள் நாயனரை மனைவி மக்களுடன் வணங்கி திருவமுது செய்யுமாறு வேண்டினர். நாயனர் இசைதலும் திருவமுது சமைத்துத் தமது மகன் மூத்த திருநாவுக்கரசரை வாழைக் குருத்துக் கொணரும்படி கூறினர். அவர் குருத்து அரியும்பொழுது பாம்பு கடித்து விஷந் தலைக்கேறத் தாயாரிடம் குருத்தைக் கொடுத்து நிலத்தில் வீழ்ந்திறந்தார். அடிகளும் மனைவியாரும் மகவின்உடலை மறைத்துவிட்டு நாயனரைத் திருவமுது செய்யும்படி வேண்டினர். நாயனர் நடந்ததைத் திருவருளா லறிந்து பிள்ளையின் உடலைக் கொன்றை வேணியர் கோயிலுக்குக் கொணர்வித்து 'ஒன்றுகொலா'' மெனப்பதிகம பாடப் பிள்ளையா ரெழுந்தார். யாவரும் அடிகள் வீட்டுக்குச் செல்லுதலும் அங்கே நாயனர் திருவமுது செய்தார்.

## படிக்காசுபெற்றுப் பஞ்சம்நீக்கல்

சிலநாட் சென்றபின் திருப்பழனம் முதலிய பல தலங்களுக்குச் சென்று பதிகங்கள் பாடிச் செல்லுங் காலத்திலே திருஞானசம்பந்த மூர்த்தி நாயனரைத் திருப்புகலூரிற் சந்தித்து மகிழ்ந்தார். இங்கிருந்து இருவரும் புறப்பட்டுச் சில தலங்களை வழிபட்டு திருவீழிமிழலையை அடைந்து சுவாமி தரிசனஞ் செய்து வதியும் நாட்களில் அங்கே பஞ்சமுண்டாகப் படிக்காசு பெற்று அடியார்களுக்கு உணவு கொடுத்து வரும்பொழுது மழை பெய்து பஞ்சம் நீங்கிற்று. அதன் பின் பலதலங்களை வணங்கி, வேதாரணியஞ் சென்று திருக்கதவு திறக்கப் பாடி வழிபாடாற்றியபின் திருஞான சம்பந்தமூர்த்தி நாயனர் அதை அடைக்கப் பாடினர். இங்ஙனம் இருவரும் சில தலங்களைத் தரிசித்துச் செல்லும் நாட்களிலே பாண்டியன் தேவி மங்கையர்க்கரசியாரும் மந்திரி குலச்சிறையாரும் விரும்பியபடி திருஞானசம்பந்த மூர்த்தி நாயனர் பாண்டி நாட்டுக்குச் செல்லத் திருநாவுக்கரசு நாயனர் வேதாரணியம் முதலிய தலங்களைத் தரிசித்து வடதளிப் பெருமானை வணங்கித் திருப்பைஞ்ஞீலிக்குச் செல்லும்பொழுது பசியாலும் தாகத்தாலும் வருந்தினர் சிவபிரான் ஒரு சோலையுங் குளமுமுண்டாக்கிப் பிராமண வடிவங் கொண்டு பொதிசோறுங்கொடுத்து அவருடன் திருப்பைஞ்ஞீலியை யடைந்து அங்கே மறைந்தருளினர்.

## திருக்கைலாசக் காட்சி கண்டு திருவடி அடைதல்

நாயனர் பல தலங்களை வணங்கிக் [illegible] திருக்கைலாசக் [illegible] செய்ய விரும்பி [illegible] நடக்கப் பாதங்கள் தேய்ந்தன, மார்பினுல் நகர்ந்து செல்ல மார்பும் பழுதுபட்டது அப்பொழுது ஆற்றலிழந்து வழியிற் கிடந்தார். கைலாசகிரியில் வீற்றிருந்தபடியே தம்மைத் திருவையாற்றில் தரிசித்து வணங்கும்படி சிவபிரான் அசரீரியாய்ப் பணித்தருளினர். நாயனர் திருவையாற்றையடைந்து திருக்கைலாசக் காட்சி கண்டு வணங்கித் துதித்தார். அதன்பின் பாண்டி நாட்டிலே சமணரை வாதில் வென்று சைவத்தை நிலைநாட்டிக் கூன் பாண்டியனுடைய கூனை நிமிர்த்தித் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர் திரும்பி வரும்பொழுது அவரைச் சந்தித்து உரையாடி மகிழ்ந்தார்.

இதன்பின் பாண்டி நாட்டிற் பல தலங்களை வணங்கித் திருப்புகலூரையடைந்து திருத்தொண்டு செய்தொழுகும் காலத்திற் புகலூர்ப் பெருமான் தமது சிவந்த திருவடிக்கீழ்த் தம்மை பிணியிருத்துமென்றுணர்ந்து "எண்ணுகேனென்சொல்லியெண்ணுகேனே.., புண்ணியா வுன்னடிக்கே போதுகின்றேன் பூம்புகலூர் மேவிய புண்ணியனே' என்று திருத்தாண்டகம் பாடியருளிப் பெறுதற்கரிய சிவானந்தத்துடன் ஒன்றுபட்ட பரம ஞான வடிவாகிச் சிவபெருமானது சேவடியின்கீழ் மீளாதினிதமர்ந்திருந்தார்.

'மண்முதலா முலகேத்த
மன்னு திருத் தாண்டகத்தைப்
புண்ணியா வுன்னடிக்கே
போதுகின்றே னெனப்புகன்று
நண்ணரிய சிவானந்த
ஞான வடி வேயாகி
யண்ணலார் சேவடிக்கீ
ழாண்டவர சமர்ந்திருந்தார்,"

திருச்சிற்றம்பலம்.


# யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா
134,3670
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப்பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்.

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாநோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 12 விகிதம் அறவிடப்படும். (ஈடு வைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
சிறுப்பர்.

Std. 14 20-11-46—20-11-49.

# சாலாமிஸ்ரி லேகியம்

இதனால் மூலச்சூடு, இருமல், பித்தப்பாண்டு, குன்மவாயுவு, நெஞ்செரிவு, கை கால வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச்சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவு, சூலை, சந்துவாயுவு முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனி போல் நீங்கும். தேகபுஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் அதிகமாய்க் காணுதலால் நேரிடும் பல நோய்களும் தீர்ந்து, தேகத்துக்குப் பலம் உண்டாகும்.

ஒருறுத்தல் விலை ரூபாய் 25-00, அரைறுத்தல் விலை ரூபாய் 12-50, கால்றுத்தல் விலை ரூபாய் 6-75
வி. பி. பி. செலவு பிரத்தியேகம்.
வி. பி. பி: மூலமும் மருந்துகள் அனுப்பப்படும்.

சிவஞான பற்பொடி

சிவஞான பற்பொடியினுல் காலை பல் விளக்கி வந்தால், வாய் நாற்றம், முரசு கரைதல், முரசால் சீழ்வடிதல், முரசால் இரத்தம் வருதல், பல்லில் அரணை கட்டல், பல்லைப் பூச்சி அரித்தல் முதலிய சகல துர்க்குணங்களையும் அகற்றிப் பல்லுக்குப் பெலத்தையுங் கொடுக்கும்.

பொட்டணம் 1-க்கு விலை சதம் 25

K. ஆறுமுகம்பிள்ளை

எமது விலாசம் நி. 3/1 தட்டாதெரு
M 196 1-2—30-4-52. கோட்டைமுனை, மட்டக்களப்பு.


Printed and Puplished by S. P. Kandiah, F. I. S. A. (Lond) residing at 245; Navalar Road Jaffna. or and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarponna, Jaffna on Tuesday. Aprill 22. 1952.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org